
# சத்திரப்பட்டியில் ‘நலம்காக்கும் ஸ்டாலின்’ மருத்துவ முகாம்!

## அமைச்சர் அர. சக்கரபாணி துவக்கி வைத்தார்!



ஒட்டன்சத்திரம், டிச.14-

திண்டுக்கல் மாவட்டம் சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் பொற்கால ஆட்சியை தமிழ்நாடு முதலமைச்சர் நடத்தி வருகிறார்.

மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காக்கும் 48 உள்ளிட்ட எண்ணற்ற பல்வேறு திட்டங்களை மருத்துவத் துறைக்கு தமிழக அரசு செய்து வருகிறது. ஒட்டன் சத்திரத்தில் ரூ. 25 கோடியில் விரைவில் அதி நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட மருத்துவமனை விரைவில் திறக்கப்பட உள்ளது. நேற்று நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பேசினார். முகாமில் 17 துறைகளைச் சார்ந்த சிறப்பு மருத்துவர்கள் கலந்துகொண்டு . சிகிச்சைகள் அளித்தனர்

.நிகழ்வில் இணை இயக்குனர்,ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜ், பாலு, வட்டாரமரு அலுவலர்ககாசிமுருக பிரபு, முன்னாள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் காயத்ரி தேவி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர், ரேவதி சேகர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகானந்தம், சாரதா சிவராஜ்,

மலர்விழிச்செல்வி, சக்திவேல், ரத்தினம் செல்வராஜ், செந்தில்நாதன், ஜெயராணி, ரேணுகா சேதுராஜன், ஒன்றியஇளைஞர் அணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, மருத்துவ அலுவலர்கள் கண்ணன், ஜோதிஸ் குமரவேல், சுகாதார மேற்பார்வையாளர் தியாகராஜன் உள்ளிட்ட அலுவலர்கள் மருத்துவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் மருத்துவ அலுவலர் ஜெய்னப் பாத்திமா நன்றி கூறினார்.

---

### சமூக வலைதளங்கள் மற்றும் ஓ.டி.டி.யில்

# மக்களை தவறாக திசைதிருப்பும் செய்திகள், படங்களைத் தடுக்க என்ன நடவடிக்கை?

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!



புதுடெல்லி, டிச.14-

சமூக வலைதளங்கள் மற்றும் ஓ.டி.டி. தளங்களில் வெளியாகும் பொய்ச் செய்திகள், மக்களை தவறாக திசை திருப்ப திட்டமிட்டு பரப்பப்படும் செய்திகள், இளைஞர்களின் மனநிலை மற்றும் பழக்க வழக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் படங்கள், செய்திகள் போன்றவற்றை, பேச்சுரிமை மற்றும் சுதந்திரத்தை பாதிக்காத வகையில் தடுக்கவும் கண்காணிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் எல். முருகன் அளித்த பதில்:

அரசமைப்புச் சட்டம் பிரிவு 19 பேச்சுரிமையைப் பாதுகாக்கிறது. அதேநேரத்தில், சமூக வலைதளங்களில் உலாவரும் உண்மைக்கு மாறான மற்றும் பொய்ச் செய்திகளால் ஏற்படும் ஆபத்தை அரசு உணர்ந்தே இருக்கிறது. அதனால்தான் தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000 ன் கீழ் டிஜிட்டல் மீடியா நெறிமுறை மற்றும் விதிமுறைகள் 2021 ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டு அமலில் இருக்கிறது.

தற்போது நாட்டில் உள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட விசயங்களைத் தாண்டி, சமூக வலைதளங்களில் செய்திகள் மற்றும் படங்களை வெளியிடுவதை இந்த விதிமுறைகள் தடுக்கின்றன. ஒத்துமொத்தமாக மக்களை ஐந்து வகையான வயதுப் பிரிவாக பிரித்து, அந்தப் பிரிவின் அடையாளத்தோடு செய்திகள் மற்றும் படங்களை வெளியிட அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஓ.டி.டி. தளங்களில் குழந்தைகள் மற்றும் பெரியவர் அல்லாதோர் பார்க்கக் கூடாத படங்களை முற்றிலும் தடை செய்ய வழிவகை செய்ய அறிவுறுத்தியுள்ளோம்.

செய்திகளைப் பொறுத்தவரை, ஒன்றிய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தால் அவ்வப்போது அமல்படுத்தப்படும் விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள்படி செய்திகள் மற்றும் தற்கால நிகழ்வு களை வெளியிடும்படியும் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. பிரஸ் கவுன்சில் சட்டம் 1978 ன் படி வகுக்கப்பட்ட செய்தியாளர்களுக்கான நடத்தை விதிகளுக்கு உட்பட்டு செய்திகள் வெளியாவதும் கண்காணிக்கப்படுகிறது. இதன்படி உண்மைக்கு மாறான, தவறான, மக்களை தவறாக திசைதிருப்பக் கூடிய செய்திகள் மற்றும் படங்களை வெளியிடக் கூடாது என்பதும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த விதிமுறைகள்படிதான் செய்திகள் மற்றும் படங்கள் வெளியாகிறதா என்பதைக் கண்காணிக்க வெளியீட்டாளர், வெளியீட்டாளர்கள் ஒழுங்குமுறை அமைப்பு மற்றும் ஒன்றிய அரசின் கண்காணிப்பு அமைப்பு என மூன்றடுக்கு ஏற்பாடு அமலில் இருக்கிறது. முதல் இரண்டு நிலையில் இருப்பவர்கள் பேச்சு மற்றும் பத்திரிகை சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுவதை கண்காணிக்கிறார்கள்.

அதேபோல யூடியூப் மற்றும் பேஸ்புக்கில் வரும் செய்திகள் மற்றும் படங்கள் விதிகளுக்கு உட்பட்டு வருகின்றனவா என்பதும் தொடர்ச்சியாக கவனிக்கப்படுகிறது. ஒன்றிய அரசைப் பற்றி தவறான செய்திகள் வெளியாவதைத் தடுக்க, மத்திய தகவல் மையத்தின் சார்பில் உண்மை கண்டறியும் பிரிவு ஒன்று 2019ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் ஒவ்வொரு அமைச்சகம் மற்றும் துறையினரிடம் தொடர்புகொண்டு, வந்துள்ள செய்தி சரியானதா, தவறானதா என்பதை உறுதி செய்து சமூக வலைதளங்களில் பதிவிடுவது இந்தப் பிரிவின் முக்கிய பணியாகும்.

இந்திய தேசத்தின் பாதுகாப்பு, ஒற்றுமை, மாநிலங்களின் பாதுகாப்பு மற்றும் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும் வெப்சைட் மற்றும் சமூக வலைதளப் பக்கங்களை தடை செய்ய தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 69 ஏ வகைசெய்கிறது.

இதுதவிர, இந்தியக் கலாச்சாரங்களை டிஜிட்டல் ஊடகங்களில் பரவச் செய்யவும் ஒன்றிய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதற்காக பிரத்யேக மாநாடுகள் மற்றும் கருத்தரங்கங்களையும் நடத்துகிறோம்.

இந்தியா முழுக்க பல துறைகளில் திறமையானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கமளித்து, அவர்களின் எண்ணத்தில் உதித்த படைப்புகளை பதிவேற்றம் செய்யவும் ஒன்றிய அரசு ஊக்கப்படுத்துகிறது. அது மட்டுமின்றி இந்திய கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளின் அடிப்படையில் தயாரான படைப்புகள் மற்றும் பொருட்களை விற்பனை செய்யவும் வேவ்ஸ் பஜார் என்ற பெயரில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து இப்படித் தயாராகும் படைப்புகளில் முதலீடு செய்யவும், கொள்முதல் செய்யவும் உலகளாவிய சந்தையை இந்த வேவ்ஸ் பஜார் திறந்து விட்டிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் எல்.முருகன் பதிலளித்தார்.



தமிழ்நாட்டு மீனவர்கள் மீது எப்போதும் பேரன்போடு மக்களாட்சி நடத்தும் திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி தங்கச்சிமடம் ஊராட்சியைச் சேர்ந்த ஆரோக்ய நிஸ்டல் என்கிற மீனவர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது தவறி விழுந்து பரிதாபமாக உயிரிழந்த செய்தி அறிந்து இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், அவரது இல்லத்திற்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து தனது சொந்த நிதியினை அளித்து அரசு உதவி பெற்றுத்தரப்படும் என உறுதியளித்தார்.

---

# திருவண்ணாமலையில் இளைஞர்களின் சங்கமத் திருவிழா!



நமது இந்திய தேசம் ஆங்கில ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த காலகட்டத்தில், 18 ம் நூற்றாண்டின் இறுதியில் சுதந்திர வேட்கை கொண்ட புதுப்புது இயக்கங்கள் தோன்றி, பல்வேறு போராட்டம், ஆர்ப்பாட்டங்களை நடத்தி, சிறைபட்டு, வதைபட்டு, தங்களது உரிமை முழக்கத்தை ஒலித்தே வந்தன.

ஒரு சில அமைப்புகள் பிரிட்டிஷ் ஆட்சிக்குள்ளே சமூக நீதி, சமத்துவம், பிரதிநிதித்துவம், ஒதுக்கீடு, வேலைவாய்ப்பு, என அடித்தட்டு மக்களின் அத்தியாவசிய, தேவைகளை முன்னெடுத்து வலியுறுத்தி போராடி வந்தனர்.

அப்படி பணியாற்றிய இயக்கங்களில் தென்னகத்தில் பார்ப்பனரல்லாதோர் இயக்கம், தென்னிந்திய நல உரிமையணி, நீதிக்கட்சி, திராவிடர் கழகம் என வழி,வழியாக ஏற்றம் பெற்று ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வினை மதித்து, அவர்களின் உரிமைகளை மீட்டெடுக்க சர்வபரிதியாகம் புரிந்து, சமர்களத்தில் இன்றும் கம்பீரமாக நிற்கும் ஒரே இயக்கம் நமது திராவிட முன்னேற்றக் கழகம்!.

சர். பிட்டி. தியாகராயர், டி. எம். நாயர், டாக்டர் நடேசனார், பனகல் அரசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தமிழினத்தளபதி என வெற்றி நடைபோடும் கழகத்தின் படைவரிசையில், புதிய வியூகங்களை புகுத்தி, அவற்றை முறைப்படுத்தி, சனாதனம், ஆரிய மாயை, இந்தித் திணிப்பு, பகுத்தறிவிற்கு ஒவ்வாத பழைய பஞ்சாங்கம் போன்றவற்றின் அடித்தளத்தை அடித்து, நொறுக்கிடும் ஆற்றல் படைத்த கழகத்தின் இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஓய்வறியா உழைப்பின் ஒரு பகுதியாக திருவண்ணாமலையில் இன்று (டிசம்பர் 14) மண்டல இளைஞரணி நிர்வாகிகளின் சங்கமம் நடைபெறுகிறது.

வடாற்காட்டில், பழைய வேலூர் மாவட்டத்தில் ப.உ.ச., இரா. தர்மலிங்கம், புலவர் கோவிந்தன், பாபு ஜனார்த்தனம், முருகையன், ம.பா. சாரதி, போளூர் சுப்பிரமணியம், வி. ஜ. டி விஸ்வநாதன், வேலூர் வி. எம். தேவராஜ், ஆற்காடு வீராசாமி, இன்றைய நமது பொதுச் செயலாளர் துரைமுருகன், ஜெகத்ரட்சகன் என தியாகங்கள் பல புரிந்து, போராட்ட ரணங்களை சுமந்த பெருவீரர்கள் பலரை இயக்கத்திற்கு அளித்த, தீரர் பூமியாம் திருவண்ணாமலையில் திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் தலைமையில் நடைபெறும் மண்டல இளைஞரணி கருத்தரங்கம்.



வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞரணி தம்பிமார்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வை இளைஞரணி மண்டல மாநாடென்பதா? இளைஞர்களின் சங்கமத் திருவிழாவென்பதா? பகுத்தறிவு பாசறைக் கூட்டமென்பதா?

எப்படிச் சொல்லினும், ஒழுக்கத்துடன், நேர்த்தியாக, கட்டுப்பாட்டுடன் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வினை நடத்தி காட்டவிருக்கிறார் நமது துணை முதல்வர் உதயநிதி அவர்கள்.

இந்தியாவில் இயங்கும் வேறெந்த இயக்கத்திற்கும் இல்லாத தனிப்பெரும் துணையமைப்பாக செயல்படும் இளைஞரணியின் செயலாளராகப் பொறுப்பேற்ற நாள்முதலாய், வியூகங்கள் வகுத்து, வெற்றிகளை குவித்து, எதிர்ப்புகளை முறியடித்து, சனாதன சங்கிகளின் வெற்றுக் கூச்சலுக்கு, வியத்தகு விடைகூறும் இளைஞர் படையின் பெருவீரன் உதயநிதி அவர்கள் தமிழினத்தின் எதிர்கால சவால்களை சந்திக்க, இனப் பகைவர்களை எச்சரிக்க, ஆரியத்தின் வேரறுக்க, ஆதிக்க இந்தியை என்றும் விரட்டியடிக்க, திரை மாயத்தின் பொய்முகம் கிழிக்க, இவற்றோடு வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளை கூட்டணியினரின் துணையுடன் வென்றெடுக்க, நாளை தமிழினத்தின் நாயகர்களாம் இளைஞர்களை நல்லறிவு பெற திருவண்ணாமலைக்கு அழைக்கிறார்.

1967ல் தொடங்கி, இன்றைய நாள்வரை, கழகம் ஆட்சியிலிருந்த காலகட்டத்தில் செயல்படுத்திய மக்கள் நல திட்டங்களை இல்லந்தோறும் எடுத்துச் சொல்லும் தலையாயப்பணியை என்றோ தொடங்கிய இளைஞரணியினர் இவற்றையெல்லாம் இன்று முதல் இன்னும் வேகப்படுத்த, கண் துஞ்சாமல், மெய்வருத்தம் பாராமல் , கடமையே கண்ணெனப் பாடுபட கழகத்தின் முன்னணியினரின் அறிவுரை, ஆதாரங்களை அடிக்கிடும் வரலாற்றுப் போர்முழக்கம், சனாதன சாடல், போன்றவற்றை உள்வாங்கி, உணர்பெற்று, உத்வேகத்துடன் பணியாற்ற இளைஞரணியினரை தயார்படுத்தும் உலைக்களமாம் திருவண்ணாமலை கூட்டத்திற்கு அழைக்கிறார்.

உலகில் தோன்றிய பல புரட்சிகளுக்கு, ஆட்சி மாற்றங்களுக்கு, அடிமை ஒழிப்பிற்கு, ஆதிக்க வெறியை அடித்து நொறுக்கிய படைக்கு தலைமையேற்றவர்கள் பெரும்பாலும் இளைஞர்களே!

உலகை ஒரு குடையின் கீழ் கொண்டுவர நினைத்து பல வெற்றிகளைக் குவித்த மாவீரன் அலெக்சாண்டர், பிரஞ்சு புரட்சியின் மூலம் சாதாரண சிப்பாயாகவிருந்து, சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தியாக உயர்ந்த நெப்போலியன் போனபார்ட், உலக நாடுகளின் நல்லெண்ணத்தை பெற்ற அமெரிக்க அதிபர் ஜான். எப். கென்னடி, இந்தியாவில் 40 வயதில் ஒரு இயக்கத்தின் தலைவரான பேரறிஞர் அண்ணா, 44 வயதில் முதலமைச்சரான தலைவர் கலைஞர், 44 வயதில் சென்னை மாநகரத் தந்தையான தளபதியவர்கள்,

40 வயதில் பிரதமரான ராஜீவ்காந்தி என எண்ணற்ற சாதனைகளைப் புரிந்தோரெல்லாம் அன்றைய நாள் இளைஞர்களே என்பதை இன்றைய இளைஞர்களுக்கு நினைவூட்டும் மற்றுமொரு அறிவுத் திருவிழாவாகவே திருவண்ணாமலை விழாக் கோலம் காணவிருக்கிறது.

இவற்றுடன் தமிழினத்தை தனது பாசிசக் கொடுங்கரங்களைக் கொண்டு பற்றிட நினைக்கும் பா.ஜ.க., முறைவாசல் செய்தே முதுகு வளைந்த அ.தி.மு.க., திடீர் பிள்ளையாரைப்போல் முளைத்திருக்கும் திரை பப்பூன்கள், அட்டைக்கத்தி வீரர்கள், மொட்டைத்தலை (குரு) மூர்த்திகள் போன்ற சமூக கேடுகளை, அவலங்களை முறியடிக்கும் தலையாயக் கடமை இளைஞர்களுக்கு காத்திருக்கிறது.

இவற்றையெல்லாம் கழகத்தின் மூத்தோர், களம் பலக் கண்ட முன்னணியினர் சொல்கேட்டு, வெற்றிக்கனி பறிக்கும் வியூகங்கள் பல வகுக்கும் விடியல் விழா திருவண்ணாமலையில் நடைபெறுகிறது.

வாக்களிக்கும் மக்களுக்கு வழிகாட்டி, வாழ்வளிக்கும் தலைவர்! வளம் கொழிக்கும் தமிழினத்தின் நம்பிக்கை நாயகர் நமது திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் தலைமையுரை கேட்டு, தாயகத்தின் பெருமையுணர்ந்து, கடமையறிந்து, காரியமாற்ற, களம் அழைக்கிறது நாளைய தலைவர்களாம் இளைஞரணியினரை!

தீபமேற்றும் திருவண்ணாமலையில் திராவிடச் சுடரேந்தி வலம் வரும் இளைஞரணியின் எழுச்சி நாயகர், இளந்தலைவர், இளைஞரெல்லாம் உதயநிதி எங்கள் இதயநிதி என உற்சாகமுடன் ஓங்கியொலிக்கும் வாழ்த்தொலி திருவண்ணாமலையைக் கடந்து திக்கெட்டும் ஒலிக்க, ஆர்ப்பரிக்கும் அலைக் கடலென சங்கமிக்கும் இன்று (டிசம்பர் 14) தமிழக வரலாற்றில் தவிர்க்கமுடியாத சாதனைத் திருநாளாய் அமைவது திண்ணம்.

ஆம் தம்பிகளே! அந்த அறிவுத் திருவிழாவில் தெளிவுபெறவிருக்கும் உங்கள் சுடர் முகம் காண, கவர்ச்சி சூழ்ச்சிகளில் சிக்காத சிங்கநிகர் இளைஞர்கள் வெண்சீருடையில் அணிவகுக்கும் கட்டுப்பாட்டை கண்டு மகிழ, காத்திருப்பார் துணை முதல்வர் உதயநிதி!

கனிந்து, கனிந்து!
இளைஞரணியினரை நினைந்து, நினைந்து!
வெல்வோம் இருநூறு!
படைப்போம் வரலாறு!